திரு. செ. இராமலிங்கம் : தஞ்சை மாவட்டம் தமிழ் நாட்டின் நெற் களஞ்சியம் என்று சொல்வார்கள். குறுவை சாகுபடி ஆரம்பித்திருக்கிறது. அரசாங்க விதைப் பண்ணைகளிலும். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து இதுபோல் தினசரி என்ன வாயிற்று என்று பேரவையில் கேட்டுக்கொண்டிருக்கக்கூடாது.

4. அரசினர் சட்ட முன்வடிவு.

(அ) நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(5) 1980–81-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம்—விவாதம் தொடர்ச்சி.

*திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் வரவுசெலவுத் திட்டத்தின்மீது பேசுகின்ற தகுதியினை வழங்கிய மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்களுக்கும் நான் சார்ந்திருக்கிற பூங்கா நகர் தொகுதி மக்களுக்கும் என் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரவுசெலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த நிதியமைச்சர் அவர்கள்,

“ இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு ”

என்ற திருக்குறளோடு இங்கே சமர்ப்பித்தார்கள். அதைப் போலவே,

TRUTH ALONE TRIUMPHS